# TAMIL NADU ELECTRICITY OMBUDSMAN

19- A, Rukmini Lakshmipathy Salai, (Marshal Road),
Egmore, Chennai – 600 008.
Phone : ++91-044-2841 1376 / 2841 1378/ 2841 1379 Fax : ++91-044-2841 1377
Email : tnercmail@gmail.com Web site : www. tneo.gov.in

**முன்னிலை: திரு.ஆ.தர்மராஜ், மின்குறை தீர்ப்பாளர்**

**மேல்முறையீட்டு மனு எண் 53/2016**

திரு. N. லோகநாதன்,
த/பெ பாஸ்கரன்,
24, காமராஜர் சாலை,
இராஜ அண்ணாமலைபுரம்,
சென்னை 600 028. ....... மேல் முறையீட்டாளர்
(திரு. N. லோகநாதன்)

எதிர்

1) செயற்பொறியாளர்/இ&ப,
தி. நகர்,
சென்னை மின்பகிர்மான வட்டம்/மையம்,
தமிழ்நாடு மின்உற்பத்தி மற்றும் பகிர்மான கழகம்,
110/33/11 கே.வி. வள்ளுவர்கோட்டம் துணை மின் நிலைய வளாகம்,
எம்.ஜி.ஆர். சாலை, நுங்கம்பாக்கம்,
சென்னை – 600 034.

2) உதவி செயற்பொறியாளர்/இ&ப/தேனாம்பேட்டை,
சென்னை மின்பகிர்மான வட்டம்/மையம்,
தமிழ்நாடு மின்உற்பத்தி மற்றும் பகிர்மான கழகம்,
எண்.1, கிரீன்வேஸ் சாலை, R.A. புரம்,
சென்னை– 28. ......எதிர்மனுதாரர்கள்
(திரு. ராஜேந்திரன், செயற்பொறியாளர்/தி.நகர் &
திரு. அசோகன், உதவி செயற்பொறியாளர், தேனாம்பேட்டை )

**கேட்புரை நாள்: 27–9–2016 & 30.11.2016**

**ஆணை நாள் : 16–12–2016**

திரு. N. லோகநாதன், த/பெ பாஸ்கரன், அவர்களின் 2.7.2016 நாளிட்ட மனு மேல் முறையீட்டு மனு எண் 53 / 2016 ஆக பதிவு செய்யப்பட்டுள்ளது. மேற்கண்ட மனுவின் மீது மின்குறைதீர்ப்பாளரின் கேட்புரை 27.9.2016 மற்றும் 30.11.2016 ஆகிய நாட்களில் நடைபெற்றது. மேல்முறையீட்டாளரின் மனுவிலுள்ள வாதங்கள், எதிர்மனுதாரரின் பதிலுரையிலுள்ள வாதங்கள்

மற்றும் இருதரப்பினராலும் கேட்புரை நாளில் எடுத்துரைக்கப்பட்ட வாதங்கள் ஆகிய அனைத்தையும் ஆராய்ந்து மின்குறைதீர்ப்பாளரால் கீழ்கண்ட ஆணை வழங்கப்படுகிறது.

## ஆணை

**1. மேல்முறையீட்டாளரின் கோரிக்கை :**

மேல்முறையீட்டாளர் மின்சாரம் பயன்படுத்தாத நாட்களுக்கு (10.10.2011 முதல் 2.11.2011 வரை) அவர் பணம் செலுத்தாமல் இருக்க வேண்டும் என்று கேட்டுக் கொண்டுள்ளார்.

**2. வழக்கின் சுருக்கம்:**

2.1 திரு. லோகநாதன், அவர்கள் 209–039–1078 என்ற மின்இணைப்பை பயன்படுத்தி வருகிறார். அது IA என்ற மின்கட்டண விகிதத்தில் உள்ளது.

2.2 மேற்கண்ட மின்இணைப்பில் மின்னளவி பழுதானால் 10/2010, 12/2010 மற்றும் 2/2011 ஆகிய கணக்கீடு காலங்களுக்கு ரூ.5696/ செலுத்த வேண்டும் என்று 9.1.2016ல் அறிவிப்பு கொடுக்கப்பட்டுள்ளது.

2.3 மேல்முறையீட்டாளர் அவர் குடும்பத்துடன் 10.2011 முதல் 2.11.2011 வரை சொந்த ஊருக்கு சென்றிருந்ததால் மேற்கண்ட நிலுவைத்தொகையை இரத்து செய்ய வேண்டும் என்று மின்நுகர்வோர் குறைதீர்க்கும் மன்றத்திற்கு 2.1.2016ல் மனு செய்துள்ளார். மன்றம் அவருடைய சராசரி பயன்பாட்டளவை ஒழுங்குமுறை ஆணையத்தின்விதி 11(2)ன் படி மின்னளவி மாற்றிய பின்பு உள்ள 8/2011 மற்றும் 10/2011 ஆகிய மாதங்களின் பயன்பாட்டின்படி கணக்கீடு செய்து வசூலிக்கும்படி தெரிவித்துள்ளது.

2.4 மேற்கண்ட மன்றத்தின் ஆணையில் அதிருப்தியுற்ற மேல்முறையீட்டாளர் இந்த மேல்முறையீட்டு மனுவினை மின்குறைதீர்ப்பாளர் முன்பாக சமர்ப்பித்துள்ளார்.

2.5 மேல்முறையீட்டாளர் மன்றத்தின் ஆணையில் செலுத்தப்படவேண்டும் என்று தெரிவிக்கப்பட்ட தொகையில் 25 சதவீத தொகையை முன்பணமாக செலுத்தியமைக்கான

உரிமம்தாரரால் அளிக்கப்பட்ட ரசீதின் நகலை அனுப்ப வேண்டும் என்று 20.5.2016 நாளிட்ட கடிதத்தில் தெரிவிக்கப்பட்டது.

2.6 மேல்முறையீட்டாளர் தன்னுடைய 2.7.2016 நாளிட்ட மனுவில் அவர் செலுத்த வேண்டிய நிலுவைத்தொகையில் 25 சதவீத தொகையாக ரூ.1424/—ஐ செலுத்தியுள்ளதாக தெரிவித்து ரசீது எண்.4049802 dt.2.7.2016ன் நகலையும் சமர்ப்பித்துள்ளார். அவரின் மனு மேல்முறையீட்டு மனு எண்.53/2016 ஆக பதிவு செய்யப்பட்டது.

3. <u>மன்றத்தின் தீர்வு</u>

சென்னை மின் பகிர்மான வட்டம்/மையத்தின் மின்நுகர்வோர் குறைதீர்க்கும் மன்றம், தன்னுடைய தீர்வை 25.2.2016 நாளிட்ட ஆணையில் தெரிவித்துள்ளது. அந்த தீர்வின் சம்பந்தப்பட்ட பத்தி கீழே கொடுக்கப்பட்டுள்ளது.

*"**<u>4. Findings & Orders :</u>***

*Both the complainant and licensees statements were heared. Records were analysed. Upon analysation it is found that the meter was changed in the service connection on 1/2011 due to the reason "stuck up". The complainant also did not enclose any evidence to substantiate his claim. While the average levied is for the period 10/2010 to 03/2011, and the meter is also changed due to "stuck up", the complainant, in his representation, states that he was out of station during 10.10.11 to 02.11.11. He might be out of station during the period said by him, but the average imposed is for the previous period only. Hence the consumer request to cancel the average levied can't be considered.*

*The licensees are therefore directed to revise the average imposed to the complainant, taking into consideration the same months (for which average was levied) bimonthly consumption after meter change in the next year (i.e) 8/2011 and 10/2011 (which comes to around 955 units) as per the TNERC clause (11) sub clause (2) and to communicate it to the complainant for collection. "*

4. <u>மேல்முறையீட்டாளரின் மனுவிலுள்ள வாதங்கள் :—</u>

4.1 மேல்முறையீட்டாளர் மின்நுகர்வோர் குறைதீர்க்கும் மன்றத்திற்கு சமர்ப்பித்துள்ள மனுவில்கீழ்கண்ட வாதங்களை தெரிவித்துள்ளார்.

(i) மேல்முறையீட்டாளர் **22.3.2012, 22.3.2013, 22.3.2014** மற்றும் **20.1.2016** ஆகிய தேதிகளில் பல கடிதங்கள் எழுதியுள்ளார். பதிலும் நடவடிக்கையும் எடுக்கப்படவில்லை.

(ii) **10.10.2011** முதல் **2.11.2011** வரை மேல்முறையீட்டாளரின் குடும்பத்துடன் வெளியூர் சென்று விட்டார். அதற்கு உண்டான இரயில்வே டிக்கேட்டும் ADE. அவர்களிடம் கொடுத்துவிட்டார்.

(iii) ஊரில் இருந்து வந்தவுடன் மீட்டரை பார்த்தார். மீட்டர் ஓடவில்லை உடனடியாக ADE, AE அவர்களை தொடர்பு கொண்டு குறையை தெரிவித்தார். உடனே ஒரு சில நிமிடங்கள் சென்று மீட்டரை தட்டிப் பார்த்தார். மீட்டர் ஓட தொடங்கியது. உடனடியாக ADE, AE அவர்களை தொடர்பு கொண்டு மீட்டர் ஒடுகிறது மீட்டரை மாற்ற வேண்டாம் என்று கூறினார். அவர் உடனடியாக அவர்கள் வீட்டிற்கு EB line man Robert, EB Foreman இருவரும் வந்து பார்வையிட்டார்கள். மீட்டர் நன்றாக ஒடுகின்றது. மாற்றத் தேவையில்லை என்று தெரிவித்தார்கள். இருந்தாலும் புது மீட்டர் வரும் போது மாற்றித் தருகின்றோம் என்று சொல்லி ADE அவர்கள் புது மீட்டர் மாற்றி கொடுத்தார்.

(iv) அவர்களது வீடு பூட்டிய சமயத்தில் மீட்டர் ஓடவில்லை. ஆகவே, தாங்கள் குறிப்பிட்ட தொகையை **5696/–** கட்ட இயலாது என்பதை தெரியப்படுத்துவதுடன் இது குறித்து ஐந்து கடிதங்கள் நான்கு வருடங்களாக எழுதியுள்ளார். இது குறித்து எந்தவித பதிலும் நடவடிக்கையும் எடுக்கப்படவில்லை. ஆகவே தான் தங்களுக்கு எழுதி மேற்குறிப்பிட்ட தொகையை இரத்து செய்து அவர்களுக்கு இந்த உதவியை செய்து கொடுக்கும்படி தாழ்மையுடன் கேட்டுக் கொள்கிறார்.

**4.2** **2.7.2016** நாளிட்ட மனுவில் மின்சாரம் பயன்படுத்தாத நாட்களுக்கு **10.10.2011** முதல் **2.11.2011** வரை பணம் செலுத்தாமல் இருக்கவேண்டும் என்று கேட்டுக் கொண்டுள்ளார்.

5. <u>எதிர்மனுதாரரின் பதிலுரையிலுள்ள வாதங்கள்:-</u>

5.1 திரு. N. லோகநாதன், அவர்கள் 22 நாட்கள் தவிர்த்து மற்ற நாட்களுக்கு மின்கட்டண நிலுவைத்தொகையை செலுத்த சம்மதம் என்று தன்னுடைய 9.8.2016 மனுவில் தெரிவித்துள்ளார்.

5.2 இது சம்பந்தமாக வாரியத்தின் தணிக்கை பிரிவிற்கு திருத்தியமைக்கப்பட்ட ஒரு கருத்துரு சமர்ப்பிக்கப்பட்டுள்ளது. அந்த கருத்துருவிற்கு தணிக்கை பிரிவின் பதில் கிடைத்ததும் நுகர்வோருக்கு தகுந்த பதில் அனுப்பப்படும்.

6. <u>மின்குறைதீர்ப்பாளரின் கேட்புரை</u>

6.1 மேல்முறையீட்டாளரும், எதிர்மனுதாரர்களும், தங்களுடைய தரப்பு வாதங்களை நேரில் எடுத்துரைப்பதற்கு வசதியாக 27.9.2016 மற்றும் 30.11.2016 ஆகிய நாட்களில் மின்குறைதீர்ப்பாளரால் கேட்புரை நடத்தப்பட்டது.

6.2 மேல்முறையீட்டாளர் திரு. N. லோகநாதன் அவர்கள் இரு நாட்களில் கலந்து கொண்டு தன்னுடைய தரப்பு வாதங்களை எடுத்துரைத்தார்.

6.3 எதிர்மனுதாரர்.1, திரு. K. ராஜேந்திரன், செயற்பொறியாளர்/தி.நகர், எதிர்மனுதாரர்–2 திரு. அசோகன், உதவி செயற்பொறியாளர்/தேனாம்பேட்டை அவர்களும் இரண்டு நாட்களிலும் கலந்து கொண்டு தங்களுடைய தரப்பு வாதங்களை எடுத்துரைத்தனர்.

7. <u>மேல்முறையீட்டாளர் கேட்புரை நாட்களில் எடுத்துரைத்த வாதங்கள்</u>

7.1 மேல்முறையீட்டாளர் தன்னுடைய மனுவிலுள்ள வாதங்களை மீண்டும் வலியுறுத்தினார்.

7.2 10.10.2010 முதல் 2.11.2010 வரை குடும்பத்துடன் சொந்த ஊருக்கு சென்றிருந்ததால் அந்த காலங்களின் மின்சாரம் அவரின் வீட்டில் பயன்படுத்தப்படவில்லை என்று தெரிவித்தார். எனவே, சராசரி பயன்பாட்டில் அந்த காலங்களுக்கான பயன்பாட்டளவை குறைத்து அதற்கு தகுந்தாற்போல் மின்கட்டணத்தை குறைக்க வேண்டும் என்று வாதிட்டார்.

7.3 மேலும், இது சம்பந்தமாக கடந்த 5 வருடங்களாக 22.3.2012, 22.3.2013, 22.3.2014மற்றும் 20.1.2016 ஆகிய நாட்களில் மனு செய்துள்ளதாகவும் ஆனால் தனக்கு தீர்வு எதுவும் கிடைக்கவில்லை என்றும் வாதிட்டுள்ளார்.

7.5 மேலும், தன்னுடைய முறையீடுகளில் 10.10.2011 முதல் 2.11.2011 என்று தவறுதலாக எழுதிவிட்டதாகவும் ஆனால், 10.10.2010 முதல் 2.11.2010 வரை சொந்த ஊரான ராமநாதபுரம் சென்றிருந்ததாக தெரிவித்தார்.

7.6 மேலும், அவர் குடும்பத்துடன் வெளியூர் சென்றமைக்கு ஆதாரமான பயனசீட்டை உதவி செயற்பொறியாளரிடம் சமர்ப்பித்துவிட்டதாகவும் அதற்கு நகல் எதுவும் தன்னிடம் இல்லை என்றும் வாதிட்டார்.

7.7 30.11.2016 அன்று கேட்புரையின்பொழுது தன்னுடைய எழுத்துப்பூர்வமான வாதுரையையும் சமர்ப்பித்துள்ளார். அதில் உள்ள வாதங்கள் கீழே கொடுக்கப்பட்டுள்ளது.

(i) நாங்கள் குடும்பத்துடன் 10.10.2010 முதல் 2.11.2010 வரை சொந்த ஊரான இராமநாதபுரத்திற்கு சென்றிருந்தோம். அந்த சமயத்தில் நாங்கள் பீஸ் கேரியரை எடுத்து விட்டு சென்றோம். ஆகவே, மேற்கண்ட தேதியில் மின்சாரம் பயன்படுத்தவில்லை.

(ii) மேற்குறிப்பிட்ட தேதியில் மின்சாரம் பயன்படுத்தாத மின்சாரத்திற்கு ரூபாயை குறைத்து எனக்கு தகவல் அளித்தால் கட்ட தயாராக இருக்கிறேன். இதற்குரிய ரயில்கட்டணம் ரசீது உதவி இயக்குனரிடம் கொடுத்துள்ளேன். (பயணத்துக்கு உண்டான அத்தாட்சி) இதனுடைய நகல் என்னிடம் எதுவும் இல்லை.

(iii) எனக்கு தகவல் கொடுத்த தொகை ரூ.5696/– இது செயற்பொறியாளர் அவர்களால் கொடுக்கப்பட்டது. மீண்டும் ஆடிட் செய்தது ரூபாய் அதிகமாக இருக்கிறது என்று தெரிாவித்தார்கள். அது எவ்வளவு தொகையே அந்த தொகையிலிருந்து 24 நாட்கள் கழித்துவிட்டு மீதித்தொகையை கட்டி விடுகிறேன்.

(iv) தங்களின் உத்தரவுபடி 25 சதவீத தொகை ரூ.1424/– கட்டி உள்ளேன். இதையும் கழித்து மீதிதொகையை எவ்வளவு என்று தெரிவித்தால் 15 நாட்களுக்குள் கட்டிவிடுகிறேன்.

8. <u>எதிர்மனுதாரர் கேட்புரை நாளில் எடுத்துரைத்த வாதங்கள் : -</u>

8.1 திரு. K. ராஜேந்திரன், செயற்பொறியாளர்/தி. நகர் அவர்கள் தணிக்கை பிரிவிற்கு ஒரு திருத்தியமைக்கப்பட்ட கருத்துரு அனுப்பியுள்ளதாகவும், அதில் 10.10.2010 முதல் 2.11.2010 வரையிலான 22 நாட்களுக்கு உரிய சராசரி பயன்பாட்டளவை குறைத்து மின்கட்ட நிலுவைத்தொகையை நிர்ணயிக்க பரிந்துரைத்துள்ளதாக தெரிவித்து அதன் நகலையும் அளித்தார்.

8.2 மேலும், தணிக்கைத்தொகையான ரூ.6014/– ஐயும் ரத்து செய்ய வேண்டும் என்று 5.1.13ல் பரிந்துரைத்த கடிதத்தின் நகலையும் அது ஏற்புடையது அல்ல என்று தணிக்கை பிரிவு அனுப்பியுள்ள கடிதத்தின் நகலையும் சமர்ப்பித்தார்.

8.3 திரு. அசோகன், உதவி செயற்பொறியாளர்/தேனாம்பேட்டை அவர்கள் மேல்முறையீட்டாளர் குடும்பத்துடன் வெளியூர் சென்று விட்டார் என்ற தகவலைத் தெரிவித்து அது சம்பந்தமாக ரயில் பயணசீட்டை 10.10.2010 முதல் 2.11.2010 வரை ஊரில் இல்லை என்பதற்கு ஆதாரமாக கொடுத்தார் என்பதை ஒப்புக்கொண்டார். ஆனால், தற்பொழுது பயணச்சீட்டை அலுவலகத்தில் தேடி கண்டுபிடிக்க முடியவில்லை என்று 30.11.2016ன் கேட்புரையின்பொழுது தெரிவித்தார்.

8.4 செயற்பொறியாளர்/தி.நகர் அவர்கள், உதவி பொறியாளர்/ஆர்.ஏ.புரம் மின்இணைப்பு எண்.209–039–1078ஐ நேரிடையாக சென்று ஆய்வு செய்து சுற்றுப்புறத்தில் விசாரித்து மேல்முறையீட்டாளர் மேற்குறிப்பிட்ட காலங்களில் குடும்பத்துடன் வெளியூர் செய்துள்ளது உறுதி படுத்தப்பட்டுள்ளது என்று தெரிவித்துள்ளதால் 10.10.2010 முதல் 2.11.2010 வரை மின்பயன்பாடு இல்லை என்ற மேல்முறையீட்டாளரின் வாதம் ஏற்புடையது என்றும் தெரிவித்தார். எனவேதான், மேற்கண்ட காலங்களுக்கான பயன்பாட்டை மன்றம் தெரிவித்துள்ள சராசரி பயன்பாடான 955 யூனிட்களில் குறைத்து மின்கட்டண நிலுவை தொகையை நிர்ணயம் செய்து தணிக்கை பிரிவுக்கு பரிந்துரை வழங்கப்பட்டது என்றும்

வாதுரை புரிந்தார். அவ்வாறு மாற்றி அமைக்கும்பொழுது மேல்முறையீட்டாளர் செலுத்த வேண்டிய தொகை ரூ.4596/— என்று கணக்கீடு செய்யப்படுகிறது என்றும், மேல்முறையீட்டாளர் ஏற்கனவே செலுத்திய ரு.1424/— போக மீதம் ரூ.3172/— செலுத்த வேண்டும் என்றும் வாதிட்டார்.

9. <u>மின் குறைதீர்ப்பாளரின் தீர்வு :</u>

9.1 இருதரப்பு வாதங்களையும் ஆராய்ந்து பார்க்கும்பொழுது இந்த வழக்கில் வழக்கெழு வினாவாக தெரிவது,

மேல்முறையீட்டாளரின் கோரிக்கையான 10.10.2010 முதல் 2.11.2010 வரை அவர் மின்சாரம் பயன்படுத்தவில்லை என்பதால் அந்த நாட்களுக்கு சராசரி பயன்பாட்டளவின்படி கட்டணம் வசூலிக்க கூடாது என்பது ஏற்புடையதா என்பதாகும் ?

9.2 மின்இணைப்பு எண்.209—039—1078ல் 25.10.2010 பதிவு செய்யப்பட்ட மின்னளவியின் ரீடிங் 220, 23.12.2010ல் பதிவு செய்யப்பட்ட ரீடிங் 220 மின்னளவி 5.1.2011 struck up என்று மாற்றப்பட்டுள்ளது.

9.3 25.10.2010ல் மின்பயன்பாட்டளவு கணக்கீடு செய்யும்பொழுது எடுக்கப்பட்ட reading 220 ஆகும். 12/2010ல் மின்பயன்பாட்டளவு பதிவு செய்யும் பொழுதும் அதே reading 220 தான் இருந்துள்ளது.எனவே, மின்னளவி பழுது என்று உறுதி செய்யப்படுகிறது.

9.4 10/2010 கணக்கீடு மாதத்தில் மின்னளவியில் ரீடிங் 220 வந்த பின்பு மின்னளவி பழுது என்பதால் 10/2010 மாத கணக்கீடு காலத்தில் ரீடிங் 220 என்று வந்த பின்பு, பதிவு எதுவும் ஆகாமல் இருந்திருக்க வாய்ப்புள்ளது. எனவே, 10/2010 கணக்கீடு காலத்திலும் 12/2010 கணக்கீடு காலத்திலும் மின்அளவி பழுது என்று தெரிகிறது. எனவே, 5.1.2011 அன்று புதிய மின்னளவி மாற்றும் வரை உள்ள காலங்களுக்கு மின்னளவி பழுது என்பதால் மின்பயன்பாட்டளவு சராசரி முறையில்தான் கணக்கீடு செய்யப்படவேண்டும்.

9.5 இந்த வழக்கில் மின்னளவி பழுதான மேற்கண்ட காலங்களுக்கு சராசரி பயன்பாட்டின்படி மின்கட்டணம் வசூலிக்கப்படவேண்டும் என்பதில் இருதரப்பினருக்கும் கருத்து மாறுபாடு இல்லை.

9.6 மேல்முறையீட்டாளர், அவர் 10.10.2010 முதல் 2.11.2010 வரை குடும்பத்துடன் சொந்த ஊருக்கு சென்றுள்ளதால் அந்த காலங்களில் அவரின் வீட்டில் பயன்பாடு இல்லை . எனவே, சராசரி பயன்பாடு கணக்கீடு செய்யும்பொழுது அவர்கள் ஊரில் இல்லாத காலங்களுக்கு பயன்பாடு இல்லை என்று எடுத்துக்கொண்டு அதற்கு மின்கட்டணம் வசூல் செய்யக்கூடாது என்று வாதிட்டுள்ளார். மேலும், வாரியம் அவரிடம் கோரியுள்ள நிலுவைத்தொகையில் அவர்கள் ஊரில் இல்லாத காலத்திற்கும் சராசரி பயன்பாடு கணக்கீடு செய்யப்பட்டுள்ளதால் அதற்கான வீதப்படியான (Proportionate) தொகையை குறைத்து செலுத்த உத்தரவு இடவேண்டும் என்று கோரியுள்ளார். மேலும், அவர் குடும்பத்துடன் சொந்த ஊருக்கு சென்றுள்ளேன் என்பதற்கு ஆதாரமாக உதவி செயற்பொறியாளரிடம் ரயில்பயணச்சீட்டை சமர்ப்பித்துள்ளதாகவும் தெரிவித்துள்ளார்.

9.7 கேட்புரை நாளில் செயற்பொறியாளர்/தி.நகர் அவர்கள் மின்இணைப்பு எண்.209–039–1078ஐ உதவி பொறியாளர்/R.A. புரம் நேரிடையாக சென்று ஆய்வு செய்து மற்றும் சுற்றுப்புறங்களில் விசாரித்தபொழுது அவர் குறிப்பிட்ட காலங்களில் குடும்பத்துடன் வெளியூர் சென்றது மற்றும் அந்த காலங்களில் மின்சாரம் பயன்படுத்தப்படவில்லை என்பது உறுதி செய்யப்பட்டுள்ளது என்று தெரிவித்து மேற்கண்ட தகவல் தணிக்கை துறைக்கும் தெரியப்படுத்தப்பட்டுள்ளது என்று 5.1.13 நாளிட்ட துணை தலைமை அகநிலை தணிக்கை அலுவலருக்கு செயற்பொறியாளர் எழுதிய கடிதத்தின் நகலையும் அளித்தார்.

9.8 மேலும், உதவி செயற்பொறியாளர்/தேனாம்பேட்டை அவர்கள் மேல்முறையீட்டாளரால் ரயில் பயணச்சீட்டு சமர்ப்பிக்கப்பட்டுள்ளது என்பதை ஒப்புக்கொண்டுள்ளார். ஆனால், அவைகள் தற்பொழுது அலுவலகத்தில் தேடியும் கிடைக்கவில்லை என்றும் தெரிவித்துள்ளார்.

9.9 இந்த மேல்முறையீட்டாளர் தன்னுடைய முறையீடுகளில் தான் வெளியூர் சென்றிருந்த காலம் 10.10.2011 முதல் 2.11.2011 வரை என்று தெரிவித்திருந்தார். ஆனால் கேட்புரையின்பொழுது தவறுதலாக 10.10.2011 முதல் 2.11.2011 வரை என்று எழுதப்பட்டுவிட்டது. ஆனால், உண்மையாக வெளியூர் சென்றிருந்த நாட்கள் 10.10.2010 முதல் 2.11.2010 வரை என்று தெரிவித்துள்ளார். இங்கு வருடம் தவறாக தெரிவிக்கப்பட்டுள்ளது என்று தெரிவிக்கப்பட்டுள்ளதால் நான் 10.10.2011 முதல் 2.11.2011 வரையிலான காலங்களில் மேல்முறையீட்டாளரின் பயன்பாட்டளவை ஆராய விரும்புகிறேன். எனவே, 6/2011 முதல் 8/2012 வரையிலான கணக்கீடு காலங்களில் பதிவாகியுள்ள மின்பயன்பாடு கீழே கொடுக்கப்பட்டுள்ளது.

| | | |
|---|---|---|
| 6/2011 | – | 1170 |
| 8/2011 | – | 950 |
| 10/2011 | – | 960 |
| 12/2011 | – | 690 |
| 2/2012 | – | 580 |
| 4/2012 | – | 690 |
| 6/2012 | – | 760 |
| 8/2012 | – | 790 |

9.10 மேல்முறையீட்டாளர் வெளியூர் சென்றுள்ளதாக தவறான வருடத்துடன் கூடிய நாட்களான 10.10.2011 முதல் 2.11.2011 வரை என்பவை 10/2011 மற்றும் 12/2011 ஆகிய கணக்கீடு காலங்களில் உள்ளது. மேற்கண்ட விபரங்களின்படி 10/2011 கணக்கீடு காலத்தில் மின் பயன்பாட்டளவு (consumption) 960 யூனிட்கள் என்று தெரிகிறது. மேற்கண்ட பயன்பாட்டளவு 20.8.2011 முதல் 22.10.2011 வரையிலான காலங்களுக்கு ஆகும். இதில் 10.10.2011 முதல் 22.10.2011 வரையிலான 12 நாட்கள் அடங்கும். (அதாவது மேல்முறையீட்டாளர் வருடம் தவறாக கூறியுள்ள காலம்) ஆனால் பயன்பாடு 8/2011 பதிவாகியுள்ள 950

யூனிட்டுகளைவிட 10 யூனிட்டுகள் அதிகமாக உள்ளது. ஆனால், 22.10.2011 முதல் 22.12.2011 வரையிலான காலத்தில் பயன்பாட்டளவு 690 யூனிட்கள் என்று உள்ளது. அதில் 22.10.2011 முதல் 2.11.2011 வரையிலான 10 நாட்கள் அடங்கும். ஆனால், அந்த 12/2011ன் பயன்பாடு 2/2012ன் பயன்பாடான 580 யூனிட்டுகளைவிட அதிகமாக உள்ளது. மேற்கண்ட காலங்களில் மேல்முறையீட்டாளர் வெளியூர் சென்றிருந்தால் பயன்பாடு குறைவாக இருந்திருக்க வேண்டும். ஆனால், அவ்வாறு குறைவாக பயன்பாடு பதிவாகவில்லை. 12/2011ன் பயன்பாடு 8/2011, 10/2011 விட குறைவுதான். ஆனால், அதன் பிறகு உள்ள 2/2012, 4/2012, 6/2012, 8/2012 ஆகிய காலங்களின் பயன்பாட்டை ஒப்பிடும்பொழுது அந்த 12/2011 காலத்திலும் பயன்பாடு குறைவாக பதிவாகவில்லை என்று கருதமுடிகிறது. எனவே, மேல்முறையீட்டாளர் தன்னுடைய முறையீட்டில் வருடம் தவறாக போட்டுவிட்டேன் என்பது ஏற்புடையதாக உள்ளது.

9.11 மேலும், செயற்பொறியாளர்/தி.நகர் அவர்கள் 16.9.2016ல் தணிக்கைப் பிரிவிற்கு மன்றத்தின் தீர்வின்படி சராசரி பயன்பாட்டளவு 955 யூனிட்கள் என்று எடுத்துக்கொண்டு நுகர்வோர் ஊரில் இல்லை என்று தெரிவித்துள்ள 22 நாட்களுக்கு உரிய பயன்பாடான 350 யூனிட்டுகளுக்கான தொகையை நிலுவைத்தொகையில் கழித்து கொள்வதற்கு பரிந்துரைக்கப்பட்டுள்ளது என்று தெரிவித்து அந்த 16.9.2016 நாளிட்ட கடிதத்தின் நகலையும் சமர்ப்பித்துள்ளார். அதன் நகல் கீழே கொடுக்கப்பட்டுள்ளது.

*"Tamil Nadu Generation and Distribution Corporation Ltd*

| | |
|---|---|
| *From* | *To* |
| *Er. K. Rajendran, B.E.,* | *The Deputy Chief Internal Audit Officer,* |
| *Executive Engineer,* | *N.P.K.R.R. Maaligai, 144, Anna Salai,* |
| *O&M, T.Nagar/CEDC/Central* | *Chennai – 600 002.* |
| *Chennai – 600 034.* | |

*Lr.No.EE/T.N./AAO/MBM/Rev.Br./F.BOAB/D.926/ 16. dt 16.9.2016*

*Sir,*

*Sub: Elecy – CEDC/Central- T.Nagar Division Mambalam Revenue Branch – SC No.209-039-1078 Tariff Ia - Audit Slip No.33, Dt.25.5.13 – consumer representation appealed to the TNEO – accepting to pay the short fall by deleting the portion for 22 days – modification requested – reg.*

*Ref: 1.As No.33/dt.25.5.13*

*2. Consumer representation dt.9.8.16*
*3. Appeal Petition No.53 /16 dt. Hon TNEO*
***************

*A sum of Rs.6014/- towards non adoption of average for the period 8/10 - 2/11 has been raised in the above reference (1).*

*For which the consumer represents in the above reference (2) to delete a portion of period stating that he had not availed the electricity since they were out of station for the period from 10.10.2010 to 2.11.2010 of 22 days.*

*In this connection he had appealed to the Hon. TNEO vide above reference(3). As such the BOAB raised 955 units for the period 12/10 may be modified to (955/60x22 = 350 units) 955-350=605 units. A revised working is put up below. If approved the same will be collected from the consumer which result in closing of the appeal petition registered in TNEO.*

| *Period* | *To be billed* | | *Already billed* | | *Short-levy* |
|---|---|---|---|---|---|
| | *Average units* | *Amount* | *Average units* | *Amount* | |
| *8/10* | *446* | *737* | *34* | *23* | *714* |
| *10/10* | *955* | *2558* | *180* | *210* | *2348* |
| *12/10* | *605* | *1140* | *180* | *210* | *930* |
| *2/11* | *775* | *1829* | *626* | *1225* | *604* |
| | | | | | *4596* |
| | *On appeal payment made as per TNEO order* | | | | *1424* |
| | | | | | *3172* |

*Hence, it is recommended for modification of the amount raised for Rs.6014/- to Rs.4596/- please."*

**9.12** மேற்கண்ட கடிதத்தின்படி செயற்பொறியாளர்/தி.நகர் அவர்கள், **12/2010**க்கான சராசரி மின்பயன்பாட்டில், **22** நாட்களுக்கான வீதப்படியான (Proportionate) பயன்பாட்டளவு *(955/60x22 = 350 units)* **350** யூனிட்டுகள் என்று கணக்கீடு செய்து அந்த யூனிட்டுகளை கழித்து **12/2010**ன் சராசரி பயன்பாட்டளவு **605** யூனிட்டுகள் என்று எடுத்துக் கொண்டு மொத்த நிலுவைத்தொகையை கணக்கீடு செய்ய பரிந்துரைத்துள்ளார். அதாவது மொத்த நிலுவைத்தொகை ரூ.**6014/–** என்பதை ரூ.**4596/–** என்று மாற்றி அமைக்க வேண்டும் என்று பரிந்துரைத்துள்ளார். எனவே, எதிர்மனுதாரரும், மேல்முறையீட்டாளரின் கோரிக்கையான

அவர் மின்சாரம் பயன்படுத்தாத 10.10.2010 முதல் 2.11.2010 வரையிலான காலங்களுக்கு பயன்பாடு இல்லை என்பதால் அதற்கு மின்பயன்பாட்டு கட்டணம் வசூல் செய்யக்கூடாது என்பதை ஏற்றுக் கொள்கிறார் என்பது தெளிவாகிறது.

9.13 பத்தி எண்.9.10ல் உள்ள எனது தீர்வின்படி மேல்முறையீட்டாளர், தன்னுடைய மனுக்களில் 10.10.2010 முதல் 2.11.2010 வரை அவரது குடும்பம் வெளியூர் சென்றிருந்தனர் என்பதை தவறுதலாக 10.10.2011 முதல் 2.11.2011 வரை என்று தன்னுடைய மனுக்களில் தெரிவித்துள்ளார் என்பது ஏற்புடையதாக உள்ளது என்பதாலும் உதவி செயற்பொறியாளர், மேல்முறையீட்டாளர் வெளியூர் சென்றமைக்கான பயணச்சீட்டை சமர்ப்பித்துள்ளார் என்பதை ஒப்புக்கொள்வதாலும் உதவி பொறியாளர்/R.A. புரம் கள ஆய்வின் பொழுது அக்கம்பக்கத்தில் விசாரித்த பொழுது மேல்முறையீட்டாளர் வெளியூர் சென்றுள்ளது உறுதிபடுத்தப்பட்டுள்ளது என்று தெரிவித்துள்ளதாலும் மேலும், இந்த வழக்கில் மேல்முறையீட்டாளரின் கோரிக்கையை எதிர்மனுதாரர் ஏற்றுக் கொண்டுள்ளதாலும் 10.10.2010 முதல் 2.11.2010 வரையிலான காலங்களுக்கான சராசரி பயன்பாட்டளவான 350 யூனிட்டுகளுக்கான மின்கட்டணத்தோடு சம்பந்தப்பட்ட மின்கணக்கீடு காலங்களில் குறைத்து நிலுவைத்தொகையை நிர்ணயம் செய்ய வேண்டும் என்று தீர்வு செய்யப்படுகிறது.

## 10. <u>முடிவுரை:</u>

10.1 மேற்கண்ட பத்தி 9லுள்ள தீர்வின்படி 10.10.2010 முதல் 2.11.2010 வரையிலான காலங்களுக்கான சராசரி பயன்பாட்டளவான 350 யூனிட்டுகளுக்கான மின் கட்டணத்தை சம்பந்தப்பட்ட மின்கணக்கீடு காலங்களில் குறைத்து நிலுவைத் தொகையை நிர்ணயம் செய்து மேல்முறையீட்டாளர் செலுத்தவேண்டிய நிலுவைத் தொகையை கணக்கீடு செய்யவேண்டும் என்று தீர்வு செய்யப்படுகிறது.

11.2 மேலும், அவர் ஏற்கனவே செலுத்தியுள்ள ரூ.1424/—ஐயும் கணக்கில் எடுத்துக்கொண்டு அவர் வாரியத்திற்கு செலுத்தவேண்டிய நிலுவைத்தொகையை இந்த ஆணை கிடைக்கப்பெற்ற 30 நாட்களுக்குள் தெரிவித்து விதிகளின்படி அத்தொகையை வசூல் செய்ய நடவடிக்கை எடுக்க வேண்டும் என்றும் தீர்வு செய்யப்படுகிறது.

11.2 மேற்கண்ட தீர்வுடன் மேல்முறையீட்டு மனு எண். 53/2016 முடிவுக்கு கொண்டு வரப்படுகிறது. செலவு தொகை இல்லை.

**(ஆ. தர்மராஜ்)**
மின்குறைதீர்ப்பாளர்

பெறுநர்
1) திரு. N. லோகநாதன்,
த/பெ பாஸ்கரன்,
24, காமராஜர் சாலை,
இராஜ அண்ணாமலைபுரம்,
சென்னை 600 028.

2) செயற்பொறியாளர்/இ&ப,
தி. நகர்,
சென்னை மின்பகிர்மான வட்டம்/மையம்,
தமிழ்நாடு மின்உற்பத்தி மற்றும் பகிர்மான கழகம்,
110/33/11 கே.வி. வள்ளுவர்கோட்டம் துணை மின் நிலைய வளாகம்,
எம்.ஜி.ஆர். சாலை, நுங்கம்பாக்கம்,
சென்னை – 600 034.

3) உதவி செயற்பொறியாளர்/இ&ப/தேனாம்பேட்டை,
சென்னை மின்பகிர்மான வட்டம்/மையம்,
தமிழ்நாடு மின்உற்பத்தி மற்றும் பகிர்மான கழகம்,
எண்.1, கிரீன்வேஸ் சாலை, R.A. புரம்,
சென்னை– 28.

4) தலைவர்,
(மேற்பார்வை பொறியாளர்),
நுகர்வோர் குறைதீர்க்கும் மன்றம்,
சென்னை மின்பகிர்மான வட்டம்/மையம்,
தமிழ்நாடு மின்உற்பத்தி மற்றும் பகிர்மான கழகம்,
110/33/11 கே.வி. வள்ளுவர்கோட்டம் துணை மின் நிலைய வளாகம்,
எம்.ஜி.ஆர். சாலை, நுங்கம்பாக்கம்,
சென்னை – 600 034.

5) தலைவர் மற்றும் நிர்வாக இயக்குநர்,
தமிழ்நாடு மின்உற்பத்தி மற்றும் பகிர்மானக் கழகம்,
நடிப்பிசைப் புலவர் கே.ஆர். ராமசாமி மாளிகை,
144, அண்ணாசாலை, சென்னை – 600 002.

6) செயலாளர்,
தமிழ்நாடு மின்சார ஒழுங்குமுறை ஆணையம்
எண். 19A, ருக்மினி லட்சுமிபதி சாலை
எழும்பூர், சென்னை – 600 008.

7) உதவி இயக்குநர் (கணினி) – **மின் குறைதீர்ப்பாளரின் இணையதளத்தில் வெளியிடுவதற்காக**
தமிழ்நாடு மின்சார ஒழுங்குமுறை ஆணையம்,
எண். 19A, ருக்மினி லட்சுமிபதி சாலை,
எழும்பூர்,
சென்னை – 600 008.